


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## அக்டோபர் - 31.10.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் & தொழில்நுட்பம்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்















# இந்திய நிகழ்வுகள்

- **'இரும்பு மனிதர்'** என்றழைக்கப்படும் முதலாவது உள்துறை அமைச்சரான சர்தார் வல்லபாய் படேலுக்கு குஜராத் மாநிலத்தில் உள்ள **சர்தார் சரோவர் அணை** அருகே **சாதுபேட்(நர்மதா மாவட்டம்)** என்ற குட்டித் தீவில் சுமார் 182மீ உயரமுள்ள மிகப்பெரிய சிலை அமைக்கப்பட்டுள்ளது
  - சர்தார் வல்லபாய் படேல் நாட்டை ஒற்றுமைப்படுத்தியதை குறிப்பிடும் வகையில், **'ஒற்றுமை சிலை'** என்று இச்சிலை அழைக்கப்படுகிறது. இதுவே உலகின் மிக்பெரிய சிலையாக கருதப்படுகிறது. சர்தார் வல்லபாய் படேலின் பிறந்தநாளான இன்று (அக்டோபர் 31) இச்சிலை நாட்டிற்கு அர்ப்பணிக்கப்படுகிறது.

- கோவாவின் பனாஜியில் உள்ள **ஐ.என்.எஸ் ஹன்சா** என்ற இந்தியக் கடற்படை விமான தளத்தில் நீர்மூழ்கி கப்பலுக்கு எதிரான இரண்டு நாள் பயிற்சியில் இந்தியக் கடற்படையின் P – 8i விமானமும், அமெரிக்க கடற்படையின் போசிடான் என்ற விமானமும் பங்குபெற்றன.
  - **P – 8A போசிடான் விமானம் INS - Hansa** கடற்படை விமானதளத்திற்கு வருகை தருவது இதுவே முதல் முறையாகும்.

- தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை கடற்பரப்பு மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின் அடையாளப் படுத்துவதற்கான, சாகம் பிரசங்கம் 2.0 **(SAGAR DISCOURSE 2.0)** என்னும் மாநாட்டை கோவாவின் தலைநகரமான பனாஜியில் இந்திய குடியரசுத் துணைத் தலைவர் தொடங்கி வைத்துள்ளார்
  - கடற்சார் மாநாடான சாகர் பிரசங்கம் 20 ஆனது ஒருங்கிணைந்த தேசியப் பாதுகாப்பு மன்றத்தால் **(Form for Integrated National Security)** ஏற்பாடு செய்யப்பட்டது.

- அமைதியான மற்றும் நீடித்த சமூகங்களை உருவாக்குவதற்காக கல்வி கற்கும் கல்வியமைப்பிலிருந்து உருமாற்றும் கல்வியமைப்பு

முறைக்கு மாறுவதில் விளையாட்டு மற்றும் டிஜிட்டல் முறையில் கற்றலின் பங்கினை எடுத்துக் காட்டுவதற்கான, **“TECH – 2018”** என்ற சர்வதேச மாநாட்டினை, **யுனெஸ்கோவின் மகாத்மா காந்தி கல்வி நிறுவனத்துடன் இணைந்து** ஆந்திரப் பிரதேச அரசானது நடத்த உள்ளது

## உலக நிகழ்வுகள்

- நேட்டோ அமைப்பு, [வடக்கு அட்லாண்டிக் பாதுகாப்பு ஒப்பந்தம் **NATO – North Atlantic Treaty Organization**] நார்வேயில் முத்தரப்பு சந்திப்பு எனப் பொருள்படும் **Trident Juncture 2018** என்ற இராணுவப் பயிற்சியை ஆரம்பித்துள்ளது
    - பனிப்போருக்குப் பிறகு நேட்டோவின் மிகப்பெரிய இராணுவப் பயிற்சி இதுவாகும். இப்பயிற்சியானது நார்வேயின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதி, வடக்கு அட்லாண்டிக் மற்றும் பால்டிக்கடல் ஆகிய பகுதிகளில் நடைபெறும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- இங்கிலாந்தின் லீட்ஸில் நடைபெற்ற 2018 ஆம் ஆண்டிற்கான **WBL (World Billiards Limited)** உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் **சவுரவ் கோத்தாரி** சிங்கப்பூரின் பீட்டர் கல்கிறிஸ்டை வீழ்த்தி, 2018 ஆம் ஆண்டிற்கான உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகமானது, கல்வி நிலையங்களில் ஆராய்ச்சிக்கான சுற்றுச்சூழலை ஏற்படுத்துவதற்காக இரண்டு திட்டங்களின் வலைதளங்களை ஆரம்பித்துள்ளது
    - **IMPRESS (Impactual Policy Research In Social Science)** - சமூக அறிவியலில் மிகத் தீவிரமான கொள்கை ஆராய்ச்சி)
    - SPARC (Scheme for Promoting of Academic and Research Collaboration – கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான கூட்டு

ஒத்துழைப்புத் திட்டம்.

## விருதுகள்

- புதினம் மற்றும் சிறுகதை எழுத்தாளரான பென்யாமினின் ஜாஸ்மின் **(Jasmin Days)** என்ற நாவல், புதுதில்லியில் புதிதாகத் தொடங்கப்பட்ட இலக்கியத்திற்கான **JCB விருதினை** வென்றுள்ளது
  - 2018 – ஆம் ஆண்டின் JCB விருது பெற்ற இப்புத்தகம் **மலையாளத்திலிருந்து ஆங்கிலத்திற்கு ஷாநாஸ் ஹபீ** – என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டது.

## முக்கிய தினங்கள்

- **மத்திய ஊழல் ஆணையம் (CVC – Central Vigilance Commission)** ஒவ்வொரு வருடமும் சர்தார் வல்லபாய் படேலின் பிறந்த தேதி (அக்டோபர் 31) எந்த வாரத்தில் ஏற்படுகின்றதோ அவ்வாரத்தை ஊழல் தடுப்பு வாரமாக **(Vigilance Awareness Week)** அனுசரிக்கின்றது
  - 2018 ஆம் ஆண்டிற்கான ஊழல் தடுப்பு வாரம் **அக்டோபர் 27 முதல் நவம்பர் 3** வரை அனுசரிக்கப்பட்டு வருகிறது
  - 2018 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்பு வாரத்திற்கான கருத்துரு (Theme): **"ஊழலை ஒழிப்போம் - புதிய இந்தியாவைப் படைப்போம்"** என்பதாகும்.